**செ.வெ.எண்:87/ டிசம்பர்/2020** **நாள்:22.12.2020**

**திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் காலியாக உள்ள 2 ஆற்றுப்படுத்துநர் காலிப்பணியிடங்களுக்கு (1பெண், 1ஆண்) தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப.., அவர்கள் தகவல்.**

-------------------

அரசாணை எண்: நிலை.86, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, நாள்: 25.11.2016 இன் படி, தமிழ்நாடு அரசு, சமூக பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் 7 அரசு கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, கடலூர், திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி) மற்றும் 2 அரசு சிறப்பு இல்லங்களில் (சென்னை மற்றும் செங்கல்பட்டு) தங்கியிருக்கும் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் (Counselling) சேவை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் 2 ஆற்றுப்படுத்துநர் காலிப்பணியிடங்கள் (1பெண், 1ஆண்) நிரப்பப்பட உள்ளது. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் முதுகலைப்பட்டம் பெற்ற நபர்கள், அவர்களது விண்ணப்பங்களை உரிய சான்றின் ஒளிநகலுடன் **08.01.2021** தேதிக்குள் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வல்லுநர்கள் கொண்ட தேர்வு குழு மூலம் நேர்முகத்தேர்வு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

தெரிவு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் (ஒரு வருடத்தில் 60 நாட்களுக்கு மிகாமல் / வாரம் ஒரு முறை), மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) வழங்கப்படும். மேலும் விபரம் வேண்டுவோர் திருச்சி மாவட்ட நன்னடத்தை அலுவலரை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

நன்னடத்தை அலுவலர்,
அரசினர் கூர்நோக்கு இல்லம்,
34, கீழரண் சாலை,
திருச்சிராப்பள்ளி - 620 002.
தொடர்பு எண்: 9790954366

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**